செ.வெ.எண்: 583

நாள்: 12/07/2010

தமிழ்நாடு அரசு

பொது (பொது.1)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9

செய்தி வெளியீடு

ஒவ்வொரு ஆண்டும், இந்திய அரசின் உயரிய விருதான பத்ம விருதுகள் பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்காக, குடியரசு திருநாளன்று நடுவண் அரசினால் அறிவிக்கப்பட்டு பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்ம ஸ்ரீ என மூன்று நிலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள விருதிற்கான தகுதியாளர்களைத் தெரிவு செய்வதற்கான விவரக் குறிப்புக்கள் (Nominations) உரிய படிவத்தில் கூடுதல் விவரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் செயலாளர், பொதுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 அவர்களுக்கு 16.08.2010–க்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை http://mha.nic.in மற்றும் http://www.tn.gov.in என்ற இணைய தள வழி பதிவிறக்கம் (downloading) செய்து கொள்ளலாம். தகுதியான விண்ணப்பதாரர்கள் இவ்விருதிற்கென அமைக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு நடுவண் அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுவர்.

அரசு செயலாளர்
பொதுத்துறை

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9